செ.வெ.எண்: 32 நாள்: 10.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகளுக்கு 470770 எண்ணிக்கையிலான குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், சுப்பிரமணியபுரம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள மாணவர்களுக்கு தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (10.08.2016) குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி கூறியதாவது:

குடற்புழுக்களின் பாதிப்பினால் 1 முதல் 19 வயதுடைய குழந்தைகளின் உடல்நலம் பல்வேறு வகைகளில் பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்புகளிலிருந்து இளம் சிறார்களை மீட்டு ஆரோக்கிய வாழ்வினை உறுதி செய்யும் வகையில் நமது மாவட்டத்தில் நாடு தழுவிய தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த குடற்புழு நீக்க மாத்திரையை மாணவர்கள் சாப்பிடுவதன் மூலம் இரத்தசோகை தடுக்கப்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தி ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. இதன் மூலம் குழந்தைகள் நாள்தோறும் பள்ளிக்கு வருவது அதிகரிக்கிறது. குடற்புழு தொற்றினால் ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு, பசியின்மை, இரத்தசோகை, குமட்டல், வாந்தி, வயிற்று வலி, வயிற்றுப்போக்கு போன்றவைகளால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு அல்பெண்டசோல் மாத்திரை வயதுக்கேற்ற அளவு வழங்கப்படுகிறது.

நமது மாவட்டத்தில் பள்ளி செல்லும் குழந்தைகள், பள்ளி செல்லா குழந்தைகள், அங்கன்வாடி குழந்தைகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 19 வயதுடைய மாணவர்கள் என மொத்தம் 495548 குழந்தைகள் உள்ளனர். இவர்களுக்கு அங்கன்வாடி பணியாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பொது சுகாதாரத்துறை பணியாளர்கள் மூலம் 470770 மாத்திரைகள் இன்று (10.08.2016) வழங்கப்பட்டுள்ளது. இதில் விடுப்பட்ட குழந்தைகளுக்கு 17.8.2016 அன்று குடற்புழு மாத்திரைகள் வழங்கப்படும். எனவே இவ்வாய்ப்பினை பயன்படுத்தி அனைத்து பெற்றோர்களும் 19 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மாத்திரையினை விடுபடாமல் வழங்கி நோயற்ற இளம் தலைமுறையினரை உருவாக்கிட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் திருமதி.சாந்தி, அறந்தாங்கி துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கலைவாணி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரம்யாதேவி, ஒன்றியக்குழுத்தலைவர் (பொ) திரு.பெரியசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.அரசன், ஊராட்சி மன்றத்தலைவர்கள் திரு.நெவளிநாதன், திரு.ராஜேந்திரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**